(முற்பகல் 10.00)

2. தகவல் கோரல்

அறிவிக்கை கொடுத்திருந்த தீர்மானங்கள் குறித்து

திரு. மு. அம்பிகாபதி: திருப்பூரில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமை பற்றி சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும். திரு. அம்பிகாபதியிடம் தெரிவித்திருக்கிறேன். முக்கியத்துவம்வாய்ந்தது என்று நான் அதுபற்றி எடுத்த நடவடிக்கைகள் அவருக்குத் தெரியும். அவர்களே பக்கத்தில் இருந்தார்கள். தெரிந்தும் இப்படிக் கேட்கலாமா?

திரு. சொ. ந. பழனிச்சாமி: நான் 41-வது விதியின்கீழ் 1ஆம் தேதியன்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? என் அறைக்கு வாருங்கள் விவரம் சொல்லுகிறேன்.

3. உரிமைப் பிரச்சனைகள்

(அ) 'அண்ணா', 'தினகரன்', 'மெயில்', 'முரசொலி', 'தென்னகம்', 'மக்கள் குரல்' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட பிரச்சனைகள் மீது பேரவைத்தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை முருகன் மற்றும் திரு. தி. சு. நல்லத்தம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீதும், திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் 'தினகரன்' நாளேட்டின் மீதும், திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில்' நாளேட்டின் மீதும், திரு எஸ். ஆர். இராதா அவர்கள் ''முரசொலி'' நாளேட்டின் மீதும், திரு. ரகுமான்கான் ''தென்னகம்'' மற்றும் ''மக்கள் குரல்'' நாளேடுகள் மீதும், அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனைகளை எழுப்பி உள்ளனர்.

இவற்றில் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் ''மெயில்' நாளேட்டின்மீது எழுப்பி உள்ளது அவர் 'முனிசிபாலிடித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசியதாகவும், ஆனால் அப் பத்திரிகை 'பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை